திரு. எல். ஆர். பஞ்சாட்சரம்,

சிவதாபுரம்,

சேலம்,

வைத்திய முறை அட்டவணை - கட்டு. 1."

தேதி: 23.10.63. 348.

உரிமையாளரின் பெயர்: எஸ்.ஆர்.பஞ்சாட்சரம்.

ஓலைச்சுவடியின் பெயர்: வைத்திய முறை அட்டவணை கட்டு-1.

இடம்:- சிவதாபுரம், சேலம்.

***

வைத்தியமுறை அட்டவணை - 1.

இவள் ளைக்கு மருந்து:-

தேங்காய் திருகி தேங்காய் பால் பிழிந்து சட்டியிலூத்தி எரிச்சால் எண்ணை வரும். அப்பொழுது அதை அடிசிலெடுத்து வைத்து எலுமிச்சம் பழச் சாத்தை விட்டு சீனி கல் கண்டு நறுக்கிப் போட்டுக் குடிச்சால் வெள்ளை நிற்கும்.

கடுப்புக்கு:-

சாதிக்காய், கசகசா சுன்ன லவங்கப் பட்டை கல்நார், தெய் இதை யெல்லாம் ஒன்றுகக் கூட்டி அ ரத்து நெய்யில் கொடுத்தால் கடுப்பு நிற்கும்.

அதிசாரத்துக்கும் அண்டக் குளிச்சலுக்கும்:-

ஏலரிசி நல்ல சந்தனம், எலுமிச்சம் பழச் சாற்றில் கொடுக்கவும்.

கண் கலிக்கம்:-

இந்துப்பு, திப்பிலி, பீதரோகிணி, நந்திப்பூச் சாற்றினில் நயந்தரைத்திட மந்தம நேத்திர வாய்வைப் போக்கிடும் அந்த கலிக்கத்துக்கு அருந்ததி தீர்வுமே.

ஒதண்ட வாதத்துக்கு மருந்து:-

திப்பிலி, பெருங்காயம், கடுகுரோகிணி, சுக்கு, மிளகு, இந்துப்பு, வகைக்கு விராகனிடை.க, களச்சிக்காய்ப் பருப்பு விராகனிடை.5 பொடியாக்கி ஆறு பங்கிட்டு மூன்று நாளைக்கு விளக்கெண்ணெயில் மத்திச்சு சாப்பிடவேண்டும். இதுக்குப் பத்தியம் உப்பு, புளி மூன்று நாளைக்கு ஆகாது.

சிரங்கு எண்ணை:-

ஊமத்தங் காயைக் கொண்டு வந்து அதைத் துளைச்சி அதுக்குள்ளாக கெந்தகம், துத்தம் ரசம் இதை யெல்லாம் போட்டு படம் போடுகிறது. அதை எடுத்து மருவுச் சாற்றிலரைத்து அதில் நல்லெண்ணை விட்டு எரித்து தடவினால் தீரும்.

தேள் மருந்து:-

அவுரி வேர், பெருங் கிளங்கு, புங்கயிலை விரை, மிளகாய் இது மூன்றும் சமனாக கூட்டி எருக்கம் பால் விட்டு அரைத்து குளிகை பண்ணி வைத்துக் கொண்டு எருக்கம் பாலிலாவது கருப்பு வெத்திலைச் சாத்திலாவது உரைத்துக் கொட்டு வாயில் போட்டால் வலி நிற்கும்.

வீரியமுண்டாக அவிழ்தம்:-

அஞ்சைப் பிசின் சாதிக்காய் ஒன்று இது இரண்டும் நறுக்கி ஒரு படி பசுவின் பாலிலே போட்டு கண்டக் காய்ச்சிக் குடிக்கவும்.

மண்டை பீய் நாசிக்கு:-

முலைப் பாலிலே சென்னயுருவிச் சாறும் லவங்கமும் பொடி செய்து போட்டு மூக்கிலே ஊத்தவும் தீரும். திருநீற்று பத்திரியிலைச் சாறும். நெய்யும் சமனாகக் கூட்டிக் காய்ச்சி ஒன்மைப்பட ஒரு பணவிடை போட்டு மூக்கிலே ஊத்தவும். நாலு பொழுது ஊத்தவும். பீனிசி தீரும்.

பெரும்பாட்டுக்கு:-

தென்னம் பாளையை இடித்து வெள்ளாட்டுப் பாலில் பிசைந்து கொடுத்தால் நிற்கும். நெடைலட்டப் பேய் மிரட்டி யிலையைத் துவைத்து மோரில் பிசைந்து வடிகட்டி

மூன்று நேரமுங் கொடுக்கவும் நிற்கும்.

ரெத்தம் விழுகிற காசி நோவுக்கு:-

ஒரு கொட்டை வெள்ளைப் பண்டு வசம்பும் அரைத்து வெள்ளாட்டுப் பால் எலுமிச்சம் பழச்சாறு முள்ளிப் பழச் சாற்றில் கலந்து குடிக்கவும். ரெத்தக் காசி தீரும்.

இடுப்பு நோவு நெஞ்சு முறிவுக்கு:-

உளுந்து மாவு படி. க, புழுங்கலரிசி மாவு படி. க, சாமையரிசி மாவு படி. க, பெரிதாக கருப்புக்கட்டி பலம் அச்சு. 10, ஒரு வள்ளுத் தண்ணீரில் காய்ச்சி இரண்டு படி பாகான வாறே முன் மாவைப் போட்டுக் களிக் கிண்டி இதில் ஒரு படி நல்லெண்ணை விட்டு ஏலாவி சுக்கு பலம். $\frac{1}{2}$, மிளகு பலம். $\frac{1}{2}$, திப்பிலி பலம். $\frac{1}{2}$, ஓமம் பலம். $\frac{1}{2}$, பழம் பலம். $\frac{1}{2}$, தம்பராஉட்டம் பலம். $\frac{1}{2}$, கருஞ்சீரகம் பலம் $\frac{1}{2}$ சாதிக்காய் விராகனிடை. $\frac{1}{2}$, குருசாணி ஓமம் விராகனிடை. $\frac{1}{2}$ இது வெல்லாம் இள வறையாய் வறுத்து சூரணம் செய்து வைத்துக் கொண்டு முன் கிண்டின களியில் போட்டு நன்றாய் கிண்டி வைத்துக் கொண்டு உடம்புக்கு வெந்நீர் வார்த்துக் கொண்டு எலுமிச்சங் காயளவு திங்கவும். இந்தப்படி தப்பாமல் செய்து வரவும். இதுகளுக்குத் தீரும் வியாதி இடுப்பு நோவு, நெஞ்சு முறிவு இவை யெல்லாந் தீரும். இது கை கண்டது.

எலும்புக்குள் உள்ள சூட்டில் வரத்துக்கு:-

காவட்டம் பில்லு ஒரு பிடி வேர், சுக்கு, மிளகு, திப்பிலி, வெள்ளைப் பூண்டு வெந்நீர் விட்டரைத்து ஆழாக்கு வெந்நீரில் கொடுக்கவும் நோவு தீரும்.

புழு வெட்டுக்கு:-

இலைக் கள்ளி அடி மரத்தைத் துளைத்து கடுக்காய் அடைத்து எட்டா நாளெடுத்து சுட்டுக் கொட்டை போக்கிச் சதையெல்லாம் பொடி செய்து பருத்திக் கொட்டை மாத்திரம் துத்தம் கூட்டி எலுமிச்சம் பழச் சாறு விட்டுக் கலந்தோடே தலம் வைத்து இளைச்சு சிமிழில் வைத்துக் கொண்டு கன்னிலிடவும். புழு வெட்டுத் தீரும்.

சருவாங்க எரிப்புக்கு:-

பெரும்பூளை வேர் சிறுநெருஞ்சி வேர், பழம்பாசி வேர், முத்தக்காசு சந்திக் கொடி, கஞ்சாங்கோரை, சுக்கு இந்த மருந்தெல்லாம் வகைக்கு விராகனிடை. க, கூட்டி இரண்டு படி தண்ணீர் விட்டு உழக்காக காய்ச்சிக் குடிக்கவும். இரண்டு நேரங் குடிக்கவும். துவரை பச்சைப் பயறு ஆகும்.

ஏலம் ஒரு பலம், சீரகம் இரண்டு பலம், கருஞ்சரகம் இரண்டு பலம், இது சூரணம் பண்ணி நாயத்துக்கு சரி சர்க்கரை கூட்டிப் பசுவின் வெண்ணெயில் கலந்து முழுங்கவும். சரீரம் எரிப்பு நிற்கும். நெய், பச்சைப் பயறு பத்தியம் ஆகும்.

நீரடைப்புக்கு:-

சங்கிலை, பச்சை நெல்லுமி வெங்காயம் இந்த மூன்றும் தவைத்துப் பிழிந்து குடிக்க உடனே நீரிறங்கும். ஆதண்டை யிலையைத் தவைத்து மோரிலாவது குடிக்க நீர் விழும். காராட்டு மோரிலாவது கொடுக்கவும். சந்திக் கொடி பஞ்சு போல் நறுக்கின தேங்காயளவு ஈர வெங்காயம் ஒரு சேரை அரிஞ்சு போட்டு வறுத்து த்தின விளக்கெண்ணை படி ஒரு சூடப் பதமா எரித்து பெரியவர் களுக்கு கால்படி கொடுக்கச் சலம் விடும். இது திட்டம்.

சுரத்தின் மேல் விக்கலுக்கு:-

மயிலிறகு அடிப்புறமா கட்டும் நுனிப் புறமா கட்டும் சுட்டு தேனில் குப்பிரை வில் தடி தடவித் தொண்டைக் குழியில் தடவவும். விக்கல் நிற்கும்.

விக்கல் சத்திக்கு:-

நீடு மாதளை நெல்பொரி சர்க்கரை தேடு திப்பிலி தேனுடன் கோர்ஷ்டமும்
பீடை செய்யும் பெரியதோர் விக்கலும் ஓட ஓட்டத் தீரத்திடும் உண்மையே.
பூளை வேர்தழை போத வரைந்திரு நாழி மோர் தனை நல்கில் வல----
யாக நேகி படர்ந்திடும் விக்கலும் லதரவென் விரைந்திட ஓடுமே.

சுரத்துக்கு கசாயம்:-

சுக்கு, திப்பிலி, சித்தரத்தை, மிளகு இதையெல்லாம் நல்ல சூரணம் செய்து முத்திரம் வாத்துரைத்து உருண்டை செய்து நிழலுணத்தி வைத்துக் கொண்டு சந்திக் கொடி கசாயத்திலுரைத்துக் கொடுக்கச் சுரம் நிற்கும்.

சறுவ வியாதிக்கு விரோசனக் குளிகை:-

சாதிலிங்கம், வெங்காரம், மிளகு, சுக்கு, திப்பிலி, வசம்பு, இலைக் கள்ளி பட்டை இந்துப்பு, கல்லுப்பு, நேர்வாளம் சுத்தி பண்ணினது இது வெல்லாம் எலுமிச்சம் பழச் சாற்றிலிரண்டு சாமமரைத்துக் கடலை மாதிரிக் குளிகை செய்து நிழலுணத்தி வைத்துக் கொண்டு வெந்நீரில் கழச்சிக்காய் மாதிரி நல்ல வெல்லங் கூட்டிக் குளிகை உரைத்துக் கொடுக்கவும். பின்பு வயறு பேதிக்கும். கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். இதுக்கு தீரும் வியாதி பஞ்ச குன்மம், சூலவியாதி, அஸ்திசுரம், பாண்டு ரோகம், காமாலை, அசீரணம், மூல ரோகம், சுவாசகாசம், அழுவை, மகோதரம், பித்தம் இவை யெல்லாந் தீரும்.

சகல தோஷத்துக்கும், சூலைக்கும், சிறு புழு மேச்சலுக்கும், கிரணி மண்டலத்துக்கும், ஆனைச் சொறிக்கும் இந்த வியாதிக் கெல்லாம் சுக்கு, மிளகு, திப்பிலி இந்தப் பொடியும் மேல் பொடியும் குளிகையுங் கூட்டி இஞ்சிச் சாத்திலிடவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். எலும்புருக்கிக்கு ஒரு பிடி பன்றி நெய்யில் ஒரு பிடி நற்சீரகம் அரைப்பிடி, மிளகு அரைப்பிடி, மஞ்சள் சூரி இது கொதிக்க விட்டு பதத்திலிறக்கி பதினைந்து நாள் கொள்ளவும். சோத்துக்கும் வாத்து தின்றால் எலும்புருக்கி தீரும். ஒரு படி பசுவின் பாலில் உரித்த வெள்ளைப் பண்டு அரைப்படி போட்டு கோவா லேகியம் போலே காய்ச்சி அதை வைத்துக் கொண்டு தினம் கரண்டி கொள்ளவும்.

வெள்ளைக்கு:-

கருவேலங் காயை இடிச்சு, புளிந்தால் பால் போல் வரும். 1/8 படி சாறு பிழிந்து 1/8 தயிரும் விட்டுக் குழப்பிக் குடித்தால் நிற்கும். இச்சா பத்தியம்.

விந்துக் கட்டுக்கு:-

வெள்ளாட்டுக் கால் மூளை கோழி முட்டை.க, புறாமுட்டை.உ, சாதிக்காய் இதையெல்லாம் ஒன்று சேர்த்தி மூன்று நாள் வெய்யில் புடம் வைத்து பசும்பால் விட்டு அரைத்து மத்திச்சு வைத்துக் கொண்டு அந்த லேகியம் 8 நாள் தின்றால் தீரும்.

கீரிப்பூச்சிக்கு மருந்து:-

நிலாவரரை சமூலம் கொண்டு வந்து நிழலிலுலத்திப் பொடி செய்து வெந்நீரில் அரைக்காலையில் மூன்று வெருகடிப் பிரமாணம் கலக்கிக் குடிக்க வயற்றிலுள்ள கீரிப் புழு வெல்லாம் விழுந்து போம்.

ஊது காமாலை வறக் காமாலைக்கு மருந்து:-

கடுக்காய், பலம்.க, வெள்ளை வெங்காயம் பலம்.க, பழைய கோளாங்கிட்டம் பலம்.க, அரப்பொடி பலம்.க, கையாந்தகரை ஒரு படி, சிவனார்வேம்பு ஒரு கூடை இந்த மருநதெல்லாம் பொடி பண்ணி எலுமிச்சம் பழச் சாற்றில் ஊறப் போட்டு நிழலிலுணத்தி வைத்துக் கொண்டு மோருஞ் சோறுங் குடித்து பின்பு வெருகடிப் பிரமாணம்

தேனில் குடிக்கவும். சோறும் வெந்நீரும் கூட்டவும். இந்தப் படி மூன்று நாள் குடிக்கவும். உப்பு, புளி விடவும். இது கை கண்டது.

பதினெட்டு வகை குன்மத்துக்கு மருந்து:-

கல்லுப்பு மூன்று படி செந்நிறக் கள்ளிப் பட்டையை சிறு நறுக்கி உலர்த்தினது ஒருபடி வாய் குவிந்த கலயத்திலே அரைப்படி கல்லுப்பை பரப்பி அதில் நறுக்கின பட்டையை வைத்து அதின் மேல் மறுபடி ஒன்றரைப் படி கல்லுப்பு வைத்து அடக்கி அதின் மேல் படிகமிட்டு சீலை மண் பூசி பூமி மேல் விரிவு மூன்று ஒட்டை அகலம் பூமிக் கீழ் சாமமுச் சாண்கலம் குழிவெட்டி இரண்டு சாடு வெருமுட்டை குழியில் போட்டு அதின் மேல் கலயம் வைத்து அதின் மேலே ரெண்டு கூட்டு எருமுட்டை குழியில் பேச போட்டு அக்கினிப் புடமிடவும். பின்பு எடுப்பதாம்:

ஒரு பலம் சுக்கு, ஒரு பலம் மிளகு, ஒரு பலம் அசமதாகம் இரண்டு திப்பிலி, கள்சிடை, பெருங்காயம், இந்தக் கடைச் சரக்கெல்லாம் நிரப்பிக் கொண்டு பொடி செய்து பசுவின் நெய்யில் பருப்பத்தில் கூட்டிக் கலந்து சரீரத்து அறிந்து வெருகடிப் பிரமாணம் வெந்நீரில் கலந்து குடிக்கவும். இதுக்கு தீரும் வியாதி வலி குன்மம், பிசிகுன்மம், வாய்வு குன்மம், குன்மக்கட்டு இது முதலான வியாதியும் தீரும்.

பைத்திய வாத சேத்துமத்துக்கும் தோஷத்துக்கும் குளிகை:-

நிலக்குமிழம் வேர், சிறுதேக்கு, தேவதாரம், பற்படாகம், கடுக்காய் சுக்கு, கொத்தமல்லி, வசம்பு இது வகைக்கு களஞ்சு கூட்டி அஷ்ட பாகமாகக் காய்ச்சிக் கொடுக்கவும்.

தாகத்துக்கும் தோஷத்துக்கும் குளிகை:-

நிலக் குமிழ் வேர், சிறுதேக்கு, தேவதாரம், பற்படாகம், கடுக்காய் சுக்கு, கொத்தமல்லி, வசம்பு இது வகைக்கு களஞ்சு கூட்டி அஷ்ட பாகமாகக் காய்ச்சிக் கொடுக்கவும்.

தாகத்துக்கும் தோஷத்துக்கும் குளிகை:-

கோரோசனை விராகனிடை உ, கிராம்பு ஏலம், சுக்கு, சந்தனம், சீரகம், அதிமதுரம், மிளகு, சாதிக்காய், முத்தக்காசு இது வெல்லாம் சமன் கூட்டி மணத்தக்காளிச் சாறு வார்த்து மூன்று நாளரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி உலர்த்தி அதுக்கேற்ற கசாயத்திலிடவும்.

தோஷத்திற்கும் தாகசுரத்துக்கும்:-

திப்பிலி, சுக்கு, கோஷ்டம், அதிமதுரம், கிராம்பு ஏலம் திரி வில்லை வேரோடு கலந்த கொம்பு, அக்கிரகாரம், அரத்தை கண்டு பழங்கி, இது வெல்லாம் சமன் கூட்டி முலைப்பால் வார்த்தரைத்து முலைப்பாலில் கரைத்து கண்டவிஷதம் பண்ண தோஷம் தீரும்.

இன்னம் தோஷத்துக்கு நெல்லுப் பொரித்துக் கொட்டிக் கொண்டு அதில் பொரியாத நெல் லைத் தேய்த்து அரிசி யெடுத்துக் கொண்டு புன்னாகம் எரித்து வறுத்துக் கொண்டு, அந்தப் பொரியும் புன்னாகமும் சமன் கூட்டி நேசுப் பொடி பண்ணிக் கொம்புத் தேனில் குழப்பி அடிக்கடி கண்டவுஷதம் பண்ணத் தீரும்.

தாக சுரத்துக்கு கசாயம்:-

வெட்டிவேர், விலாமிச்ச வேர், செங்கழநீர் கிழங்கு, முசுமுசுக்கை, சந்த நன்னாரி வில்வ வேர், விஷ்ணு கிராந்தி, முத்தக் காசு, சனப்பபு, கடுக்காய், தான்றிக்காய் இவையெல்லாம் சமன் கூட்டி அஷ்ட பாகமாகக் காய்ச்சிக் கொடுக்கவும். சுரம், தாகம் தீரும்.

<u>பைத்தியத்துக்கு:-</u>

பசுவின் பால், எலுமிச்சம் பழச் சாறு, இஞ்சி சாறு இது மூன்றும் கலந்து சர்க்கரையும் கூட்டி கலந்து குடிக்கவும், எந்த பைத்தியமும் தீரும். இது கை கண்டது.

<u>தோஷத்துக்கு:-</u>

சீதேவி செங்கழுநீர் வேர், ஆனை வணங்கி வேர், விடத் தேரம் வேர், சதிரக் கள்ளி வேர், அறுகம் வேர், பிள்ளையுதைத்த குழியில் முளைத்த செடியின் வேர் இந்த வேரை யெல்லாம் சுடு காட்டிலே முளைத்தது ஆகு வேணும். இதுக்கு கோழி குஞ்சு பலி கொடுத்து வேர்ரும்மல் பிடுங்கி குளிசம் கட்டவும்.

<u>சிறு பிள்ளைகளுக்கு வெள்ளெருப்புக்கு:-</u>

செம்பிறண்டைக் கிழங்குப் புட்டை நறுந் தாளியிலை நார் ஐந்து மாதத்து பிள்ளைகளுக்கு மூன்று இலை ஒரு வருஷத்துப் பிள்ளைகளுக்கு ஐந்து இலை வெண்ணெயில் வேது வைத்து அரைத்து ஒரு கொட்டைப் பாக்களவு முலைப்பாலில் வார்க்க நிற்கும். புளியிலை யீர்க்கு நறுக்கி கால்படி தண்ணீரில் வசம்பு ஒரு கொட்டைப் பண்டு கூட்டி அரைத்துப் பிசைந்து வார்க்க நிற்கும்.

<u>வரமுடிக்கில்</u>

புளியீர்க்கு, இலந்தை யீர்க்கு ஒரு கொட்டை வெங்காயம் இதெல்லாம் அரைத்து சிறு பிள்ளைகளுக்கு வெந்நீரிலே வார்க்கவும். பசுங் குளி வரமுடிக்கி

<u>பசுங் குளிவரமுடிக்கி, சிறு பிள்ளைகள் பிரிச்சு பிரிச்சென்று பீச்சரத்துக்கு:-</u>

நிலக் கடம்புத் தழை, வாய் பேசாமல் கொண்டு வந்து ஒரு கொட்டைப் பூண்டு வசம்பும் மிளகு சற்றுக் கூட்டி வாய் பேசாமலரைத்து முலைப்பாலில் கொட்டைப் பாக்களவு வார்க்கவும். பிரிச்சு பிரிச்சென்று பீச்சரது நிற்கும்.

<u>மிகுதியாய் வெளிக்குப் போறதுக்கு:-</u>

பொடுதலைக் கொழுந்தும், காயும், மிளகும், கழுகும், ஓமம், வெள்ளை வெங்காயம் வசம்பு கூட்டி அரைத்து மூன்று குளிகை பண்ணி மூன்று நாள் வார்க்கவும்.

<u>மூலையுள்ளது பிள்ளைகளுக்கு பட்சி தோஷ மாறல் குளிசம்:-</u>

செவ்வாய்க் கிழமையில் சிவந்த கீரை வேரும், முலைப்பாலும் கழுநீர் விட்டை பிளிந்த தண்ணீரும் அரைத்து வார்க்கவும். கழுதைத் தும்பை குளிசம் மாடிப் போட நிற்கும்.

<u>தோஷத்துக்கு குளிசங் கட்ட:-</u>

விடத் தேரம் வேர் குளிச மாடிக் கட்ட நிற்கும். விடத் தேரின் மேல் புழுவையும் பூச்சிக் கூட்டையும் குளிசமாடிக் கட்ட நிற்கும். ஆண் பிள்ளைகளுக்கு பெண் கோழியும், பெண் பிள்ளைகளுக்கு சேவல் கோழியும் பலியிட்டுக் கொண்டு வந்து கட்டவும். பிள்ளை நிமிர்ந்தழுகும் வாய் பேசாமல் கோவையிலைச் சாறு, புளியக் குட்டு நோவு தீரும். நாயுருவி வேர், வெலிப்பருத்தி வேர், வண்ணான் துறைச் சீலையில் சுருட்டி திரியாகத் திரிச்சு நல்லெண்ணெயில் விளக்கேத்திப் பிள்ளை எதிரே வைக்க மாறும்.

<u>பெற்றி கர்ப்பாறுக்கு:-</u>

ஒரு நாம்பு அவரைவை நெருப்பாக வறுத்துப் பொடி பண்ணி வறுத்தத்தை விளக்கெண்ணை ஒரு படியில் போட்டு சூரிய புடம் வைத்துக் கொழியிற் போட்டு பண் கண்ட விடமெல்லாந் தடவப் பொரிஞ்சி போம்.

<u>எறை மாந்தம் வங்க நோவுக்கு:-</u>

ஊஞ்சப் பட்டை கொண்டு வந்து உளரு நாருரிச்சுக் கொண்டு முள்ளிக் காய் மாத்திரம் எடுத்துக் கொண்டு பச்சை நெல்லுமி ஒரு சிரங்கை இது வெல்லாம் கால்படி தண்ணீரிலே ஒரு படி தண்ணீர் வார்த்து ஊறப் போட்டு ஒரு சாமத்துக்கும் பிறகு ஒரு கரண்டி தண்ணீயெடுத்து ஒரு சங்கடை பசுவின் பாலில் கலக்கி இத்துடன் ஒரு காசிடை வெள்ளிண்டம் பால் விட்டு அவரைப் பிரமாணம் சுக்கு வெள்ளை பலும்.க, மூன்று மிளகு இது வெல்லாமரைத்துக் கலக்கி வார்க்கவும். இப்படி மூன்று நாள் வார்க்கவும். இதுக்குத் தீரும் வியாதி யிறை மாந்தம், வங்க நோவு முதலான வியாதியந் தீரும். இது கை கண்டது.

<u>பெரியோர்களுக்கு உஷ்ணம் அதிகமாகி வரண்டு போறதுக்கு மருந்து:-</u>

சிற்றுமணக்கு கொட்டை ஒரு வள்ளம் ஒரு புதுப் பானையில் போட்டு இரண்டு வள்ளத் தண்ணீர் விட்டு அ பது நாளிகை ஊற விட்டு வடிச்சுப் போட்டு மறு தண்ணீர் வார்த்து வேக வைத்து நிழலுலத்தாய் மூன்று நாள் உலர்த்தி வெய்யிலிலே ஒரு நாளுலர்த்தி இடித்து ஒரு வள்ளத் தண்ணீர் விட்டு இளநீர் வள்ளம்.க, விட்டு என்ணை ஆக்கி என்ணை பதத்தில் வடித்து என்ணையை ஒ கலசத்திலே வார்த்து மேலுக்கு படிகமிட்டு மூடிச் சீலை செய்து நெல்லுப் புழுக்கிற பானையில் முன் என்ணைக் கலசத்தை வைத்து வாய்ப்பாடு மேலே யிருக்கவே வைத்து சட்டி யிட்டு மூடி நெல் லெடுக்கிற பதத்தில் என்ணைக் கலசத்தை எடுத்து இந்தப் படி மூன்று விசை நெல்லுப் பானையில் வைத்து எடுக்கவும். பின்பு கால் புலம் சீரகம், ஏலம் புலம்.½, சர்க்கரை பலம்.½, இது மூன்றும் பொடி செய்து என்ணையில் போட்டு ஒரு நாள் சூரியபுடம் வைத்து எடுத்து வைத்துக் கொண்டு தினசரி ஒரு காசிடை கொள்ளவும். இப்படி ஒரு மண்டலங் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி உள் காச்சல், பொடியிருமல், அஸ்திசுரம், உஷ்ணம், க்ஷயம், பாண்டுவ காமாலை, இடுப்பு நோவு, கால் கை கடுப்பு, மண்டை நோவு சன்னி, சயித்தியம், உடம்பு இளைப்பு உப்பிசம் இவை எல்லாந் தீரும். கை கண்டது.

<u>வெள்ளை சீதம் விழுகிற பிள்ளைக்கு:-</u>

விடத் தோரங் கொழுந்து முள்ளிக் காய மாதிரி ஒரு கொட்டைப் பண்டு க அவரைப் பருப்பு மாதிரி சுக்கு, மிளகு.எ இது வெல்லாம் பசுவின் பாலில் வேக வைத்து அரைத்து சுண்டைக்காய் பிரமாணங் குளிகை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு மூன்று நாளைக்கு அந்தி விடிஞ்சிரண்டு நேரமும் பசுவின் பாலில் வார்க்கவும். காச்சலி

<u>காச்சலின் மேல் நஞ்சு முறிய:-</u>

கருஞ்சீரகம் விராகன்.½, நஞ்சு விரை, வேளைப் பட்டை, பெரு மருந்துக் கொடி வெள்ளைப் பூண்டு, ஓமம், சுகு வகைக்கு விராகன்.½, ஒரு படி தண்ணீர் விட்டு இந்த மருந்தெல்லாம் சட்டியிலே போட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி அம்மியிலிட்டு நேக அரைத்து களச்சிக்காய் பிரமாணம் குளிகை செய்து நேரத்துக்கு ஒரு குளிகை மூன்று நாளைக்கு கொடுக்கவும். இதுக்கு பத்தியம் உப்பு, புளி ஆகாது. இதுக்கு விக்கமும், நஞ்சும் தீரும்.

<u>மண்டை இடிப்புக்குத் தயிலம்:-</u>

பனங்கோவைப் பழம்.8, நல்லெண்ணெய் மானம்.க, ஓம் ? ஓமம், மிளகு, பூண்டு, வசம்பு, மஞ்சள் வகைக்கு விராகனிடை.உ, பனங் கோவைப் பழத்தை உற்சு சோறெல்லா மெடுத்து என்ணையில் போட்டுப் பிசைந்து அடுப்பிலே வைத்துக் காச்சத் தண்ணீர் சுண்டின பதம் பார்த்து இந்தச் சரக்கெல்லாம் தூளாக நுணுக்கி என்ணையிலே போட்டுக் சிவக்க இறக்கிக் கொள்ளவும். தலை முழுக மண்டை இடிப்பு தீரும். விசிய * முனி *

வீரியமுண்டாக மருந்து:-

அஞ்சைப் பிசிற சாதிக்காய், ஒன்று இது இரண்டும் நறுக்கி ஒரு படி பசுவின் பாலிலே போட்டு சுண்டக் காய்ச்சி குப்பை மேனி யிலைச் சாறு முன்று துளி விட்டுக் காய்ச்சிக் குடிக்கவும். இந்த முறையில் மூன்று நேரங் குடிக்க வீரியமுண்டாம்.

வெறிநாய்கடிச்சவக்கு மருந்து:-

ஓரிலைத்தாமரை இலை, மிளகும், அரைச்சுத் தேனில் கொடுத்தால் திரும். இதுகு பத்தியம் உப்பு, புளி ஆகாது. பத்திய முறிவு சிங்கிலை, உப்பு இது இரண்டையும் வருத்துக் கொடுத்தால் முறிவு.

வீரமெழுகு:-

சவ்வீரம், முருங்கைப் பச் சாறும், முலைப்பாலும், இந்தக் கரண்டியில் காச்சிகுல் குளம்பாயிருக்கும். அதில் மிளகைந்தூக்கிப் போட்டுக் கொடுக்கையால் சகல சன்னியும் தீரும். இதுக்கு முறிவு பசும் பாலில் பாக்கிலைச் சாறு வார்த்துக் கொடுத்தால் தீரும.

ஏலாதி குளிகை:-

சுக்கு, சீரகம், கல்நாரு, கற்பூரசிலாசித்து, லிவங்கம், தாளிசபத்திரி சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம், பூலாங்கிழங்கு, அசித் தகரை வேர்ப்பட்டை, வால்மிளகு, பழைய பனவெல்லம் கூட்டி எமிச்சம் பழச் சாற்றிலரைத்து சு ந்வனிங்காய் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலியுலர்த்தி வைத்துக் கொண்டு காலமே ஒன்று சயங்கா ம் ஒன் சாப்பிட்டால் உஷ்ன வாய்வாலே வந்த வயித்து நோயெல்லாந் தீரும்.

பசி தீபனத்துக்கு மருந்து:-

தவசிப் பட்டைத் சாள் ஒரு பிடி, புன்கம் பட்டைத் சாள் ஒரு பிடி, வெள்ளைப் பூண்டு பூலாவேர் பட்டைத் சாள் ஒரு படி, வெப்பாலைப் பட்டைத் சாள் ஒரு பிடி, மிளகு சாள் ஒரு பிடி, கல்லுப்பு இறாக்கு இவையெல்லாம் சாள் செய்து வைத்துக் கொண்டு சோறு உண்ட பிறகு ஒரு பிடி அசனத்தில் ஒரு படி சாள் போட்டு அசனம் பண்ணவும். தீபனமுண்டாம்.

உஷ்ணத்துக்கு சறவாங்க மெங்கும் எரிப்புக்கு:-

பெரும்புளவேர், சி நெருஞ்சி வேர், ஆனை நெருஞ்சி வேர், கத்தாளம் வேர், சிறுகீரை வேர், பழம்பாசி வேர், முத்தக்காசு, சீந்திக் கொடி, கஞ்சாங் கோரை, சுக்கு இந்த மிருந்தெல்லாம் வகைக்கு விராகனிடை கூட்டி இரண்டுபடி தண்ணீர் விட்டு உழக்குத் தண்ணீராகக் காய்ச்சிக் குடிக்கவும். இரண்டு நேரமுங் குடிக்கவும்.

காச்சலின் மேல் வயறுப்பி வலித்தால் மருந்து:-

கண்டங்கத்திரி, சந்திக்கொடி வேலி யுனைஞ்சான், சாதேவி முற்றக் காசு முந்திரிகைப் பழம், கண்டு பறங்கி சுக்கு இது கசாயமாக்கி முன்று நாள் குடிக்கவும்.

வாந்தி நிற்க மருந்து:-

பருத்திக் கொட்டைப் பருப்பு, ஏலரிசி, திப்பிலி, நெல்லுப் பொரிமாவு, சர்க்கரை, தேன் இவை குழப்பிக் கொடுக்க காச்சலின் மேல் வாந்தியாகிறது அரிசியாக வாந்திக்கிறது எல்லாம் நிற்கும்.

சுரத்தின் மேல் மாங்கிழங்கு தின்று நஞ்சேறினால் நஞ்சு முறிய மருந்து:-

ஒரு அப்பு புளியிலை ஒரு அப்ப, பொன்னாங்கண்ணி சிறுகீரை வேர், பஞ்சாக ரெண்டு வேருமி இது வெல்லாம் ஒரு சட்டியிலே போட்டு இரண்டு படி தண்ணீர் விட்டு முக்கால் படியாக்கிச் சுண்டின வீரறே முன்று நாளைக்கு முன்று வேளை குடிக்கவும் நஞ்சு முறியும்.

<u>பிரமியத்துக்கு:-</u>

அல்லிப்பூ வட்டத் துத்தி வேர், நீர்ப்புலா வேர் சீந்திக் தண்டு, குமரி மடல் வல்லாரை சர்க்கரை இது கூட்டிக் குடிக்கத் தீரும்.
(இன்னும்) ஏலம், லவுங்கம், அதிமதுரம், கோஷ்டம், சாந்திர வேதி, கல்நார் இது வகைக்கொரு காசிடை சூரனம் செய்து எலுமிச்சம் பழச் சாறு பிழிந்து நல்ல வெண்ணை ஒரு படி, சுண்ணாம்புத் தண்ணீர் ஒரு பிடி இதில் முன் செய்த சூரனம் கூட்டி இப்படி மூன்று நாள் கொள்ளத் தீரும். அமுக்கிறு வேர் வெள்ளாட்டுப் பாலில் ஏழு நாள் குடிக்கவும். கல்லுடைந்து விழும்.

<u>காய்ச்சல், மேல் தோஷத்துக்கு:-</u>

அகத்திப்பட்டை, விஷ்ணு காந்தி, சிறுபுள்ளடி, கசாயங் காய்ச்சி மூன்று விசை கொப்பளித்து உமிழ்ந்து சற்று உள்ளுக்குங் கொடுக்கத் தோஷம் முறியும். நவச்சாரம் சர்க்கரை இள வெந்நீரில் கொடுக்கக் கல்லெரிப்புத் தீரும்.

<u>அதிசாரத்துக்கு:-</u>

ஜாபி, சாதிலிங்கம், கெந்தகம், வெங்காரம், திப்பிலி, சுக்கு, மிளகு இவை யெல்லாம் எலுமிச்சம் பழச் சாற்றில் முப்பது நாளிகை அரைத்து மிளகு பிரமானம் குளிகை செய்து நிழலுலத்தி வைத்துக் கொண்டு ஒரு குளிகை தேனிலரைத்துக் கொடுக்கவும். அதிசார சுரந் ஒரு குளிகை ஆடாதோடை கஷாயத்தில் கொடுக்க விடாத சுரம் தீரும். இதுக்குப் பத்தியம் உப்பு, புளியில்லாமல் வென்னருஞ் சோறும் கொடுக்கவும்.

(வேறு)

சுக்கு, அதிவிடையம், அபினி, ஊமத்தை விரை, இலவம் பிசின், களச்சிக் காய் பருப்பு, சித்திரமூலம், அத்திப்ப. இது வெல்லாம் சமபாகமாகக் கூட்டி எலுமிச்சம் பழச் சாற்றிலொரு நாளரைத்து சிடைக் கஷாயிலேச் சாற்றிலொரு நாளரைத்து மிளகு பிரமானம் குளிகை செய்து நிழலுலத்தி வைத்துக் கொண்டு வெள்ளாட்டுத் தயிரிலாவது தேனிலாவது அருள்ளுக்காய்ச் சாற்றிலாவது ஒரு குளிகை கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். இதுக்குத் தீரும் வியாதி வயறு ரெத்தமாய் கழியறது, சீதமாய்க் கழியறது, நீர்ப்பாடு, சர்வமான வயறு களிச்சலுந் தீரும்.

<u>கடுப்புக்கு மருந்து:-</u>

சாதிக்காய் விராகனிடை.உ, சாதிப்பத்திரி விராகனிடை.உ, லவுங்கம் விராகனிடை.உ, திப்பிலி விராகனிடை.உ, தம்பராஷ்டகம் விராகனிடை.உ, அதிமதுரம் விராகனிடை.உ, மாராட்டிய மொக்கு விராகனிடை.உ, கடுக்காய் விராகனிடை.உ, சுக்கு விராகனிடை.உ, மிளகு விராகனிடை.உ, ஓமத்தை ள் விராகனிடை.உ, வெள்வெங்காயக் கட்டி விராகனிடை.உ அபினி விராகனிடை.உ இது வெல்லாந் தூள் செய்து விரை தள்ளிப் போட்ட மாதளங்காயில்லட
(முடிவு இல்லை)

<u>சத்திர வல்லாதி லேகியம்:-</u>

1. ஆதிபரனைத் துதித்த நல்ல அன்பான வல்லாதியின்பமாய்ச் சொல்வேன்
   சித்திர மூலம் வெள்ளறுகு நல்ல சிவனார் வேம்புடன் சங்கம் வேர் குப்பி
   முத்தின தேங்காயின் நெத்து நல்ல மூலமாங் கெருடன் அமுக்கிறு வேரும்.
   புத்தின் மேல் முளைத்த வெள்ளெருக்கம் நல்ல போதவே சின்னி வீளாத் திருமளம்
   வேரும். வே.
2. சாத்திக முளகற்றை நல்ல சாதகமான செங்கத்தாரி வென்றி வேர்
   உச்சித வெட்பாலை வித்து நல்ல உறவான நீர் வெட்டிப்பிரப்பங் கிழங்கு
   சித்த மகிழ் கருஞ்சீரகமும் நல்ல சிறப்பான காவக சீரகந்தானும்
   முத்திய பத விருட்சம் நல்ல முதலான வாத கரப்பானின் பட்டை தான்.

3. சத்தி கெந்தகந் துரிசு நல்ல சதிரான சூதமும் சுத்தமுஞ் சேர்த்து
சித்திரமாக யெடுத்து நல்ல சீர் பெற வெள்ளைக்கொர்ந்த்தும் நிறுத்து
முத்தியமு செங்கொட்டைப் பருப்பு நல்ல முதிரும் புறங்கிப் பட்டை புலம் ரெண்டு
விஸ்தாரமாம் பனைவெல்லம் நல்ல விளங்கிய எள்ளு சேர் வகை நிறை கொண்டு.

3. கைத்திறமாக யெடுத்து முன் கற்தாலை நோக்கியே பசிபங் கொடுத்து
சித்திரவல்லாதி யென்று முனி செப்பினர் சீடருக்குபதேசமாக
பத்திரமாக யெடுத்து நல்ல பாண்டத்தில் வைத்தொரு பாக்களவுண்டை
மண்டல மிருபோது கொள்ள நல்ல மார்க்கமாய் வியாதியை யுரைத்தரைப்போமே.

5. முத்தின சூலைக் கிரந்தி நல்ல முடக்குக் கருப்புப் பிடிப்புத் திமிர்ப்பு
பத்தின மேகங்கள் வாதம் நல்ல பாங்கான கைதனியா றல் வெருப்பு
வத்தின வுடம்பு சிரங்கு நல்ல வகையான பீபமு வெட்டுக் கடி விஷம் முதலாய்
சுத்தி நிமிர்த்த வெண்குஷ்டமம் ஒன்னும் சொல்லாமல் போகுமே வல்லாதி கண்டால்.

பொத்தி கடிபோல் வெடித்து நல்ல புண் போலுடம்பெல்லாம் வன்பா யெரித்து
கொத்திக் கிழித்த போலே மிக்க கான பாதத்தில் கீருய் வெடித்து
அத்திக் கிரந்தி ஆருக்காமீ யென்ற ஆருப் பறங்கிப் புண்புனை நோயெல்லாம்
சித்திர வல்லாதி கண்டால் நல்ல சிக்கென்ற புகை பறக்கின்றப் போலே.

7. பத்தியம் சொல்லுவேன் கேளும் நல்ல பாசிப் பயறுந் துவரம் பருப்பும்
முத்தின் முன் கத்திரிப் பிஞ்சும் நல்ல முருங்கையின் பிஞ்சு அரைக்கீரை தாளும்
சாத்தாவின் பாலும் நெய் மோரும் நல்ல சதிரான வெள்ளாடு விரால் மீன் ஈரலை
சித்திர மணக்கேளியை சீரான போது முருங்கை ரெண்டுமே.

8. புத்தியாய் வல்லாதி தன்னை நல்ல போத வாகவே ரோகங்கள் கண்டு
பத்திரமாகவே கொள்ளு நாளும் புதருமல் ஆள் கண்டு பத்தியம் சொல்வேன்
உடன் தண்டால் நித்தம் நல்ல உறவுான வெள்ளரி முழுகு முன்னெண்ணை
யித்தனை நோய் தீருமென்ற ரிஷி யின்பமாய்ச் சீடருக்குச் சொன்னூரவர் பாதம்
போற்றி.

தேங்கா யெண்ணை:

புரசங் கொட்டை சுத்தி பண்ணின பலம்.உ, நேர்வாளம் பலம்.
இந்துப்பு பலம்.க, முத்தின தேங்காய்.7, திருகிப் பாலெடுத்து சுத்தியான கொட்டை
களை அரைத்து பாலில் கலந்து இந்துப்பு போட்டுக் காய்ச்சிப் பத்தில் வடித்துக்
கொண்டு பெரியவர்களுக்கு 15 துளி நீராகாரத்தில் போட்டுக் கொடுக்கவும். வாய்வு
சிறிய காரருக்கு.உ துளி போட்டுக் கொடுக்கவும். பிள்ளைகள் வயதறிந்து
5 துளி, 7 துளி, 10 துளி, 12 துளி, நீராகாரத்தில் போட்டுக் கொடுக்கவும்.
பத்தியம் மிளகு நீர் சாதமும் சாயந்திரம், சீரக சுக்கு கஷாயம் சாப்பிடவும்.

லிங்கம் முறிவு:-

நந்தியா வட்டப் பச்சாறு விட்டு முலைப்பாலில் போட்டால் முறியும். வீரம்
இளநீர் தண்ணீரில் பத்து நாள் போட்டால் முறியும்.

பதினெட்டுக் குஷ்டத்துக்குத் தயிலம்:-

சிவனார் வேம்பு, பூவரசம் வித்து, கற்பூர சிலாசித்து இதைக் குழித்
தயிலம், கெசபுடம் வைக்கவும். இச்சா பத்தியம்.

(வேறு)

விரியன் பாம்பு.க, ரசம் விராகனிடை.3, மூலப் புளி வள்ளம்.க, சிவனார்
வேம்பு, இதைக் குழித் தயிலம் இறக்கவும். கெசபுடம் வைக்கவும். இச்சா பத்தியம்.

தேன் மருந்து:- பல்லிப் பூயில் குடைசியில் சுண்ணம் பிருக்கும் அதை எடுத்து வந்து கல்வத்
திட்டு சித்திர மூலத் தழைச் சாறு விட்டு அரைத்துக் குளிகை செய்து நிழலிலுலர்த்தி

வைத்துக் கொண்டு பச்சைத் தண்ணீரில் உரைத்துக் கொட்டு வாயில் போடவும்.

சிறு பிள்ளைகள் மாந்தத்துக்கு குளிகை :-

சரவருட பிணிக்கெல்லா மருந்து வகை செப்பக் கேள் தழை வகை வில்வை இலை வெல்லாறை சிறுகீரை, மிளகு, தக்காளி, துந்தி, சின்னி பொடி தழை, தகரை இண்டு வறப்பலா சி புள்ளடி, சிவகரந்தை, களச்சி, நல்ல சீந்தி கஞ்சா பொருமி தும்பை சா துவலை, நீலி சுரைபாகல், திரிபுர மொரித்தான் கொளிஞ்சி துளசி, முசுமுசுக்கை பூவரசு, நீர்ப்பூலா, பொன்னுவாரை, கய்யாந்தகரை, ஆவாரை, பொன்முசுட்டை பூர்வட்டை ஆவாரை கோவை நன்னாரி வேளை வேலிப் பருத்தி, திங்கும் எலந்தை நிலையாவாரை கீழ்காயும் நெல்லி சென்னுயுருவி, முசக்காதி முருக்கு சிறுபளை நிலா விளா சீந்தி, கண்டங்கத்திரி, நன்னாரி, பழம்பாசி, முருங்கை, நாய்த்துளசி, புன்னுக்குப் பண்டு நொச்சி துவரை கண்டு மேலித் தழை யெல்லாம் வகைக்கு ஒரு கையளவு பொரித்து வந்து தனிச் சாறு வாங்கி மண்டலந் தன்னில் தலிலடுப்பிலோட்டை வைத்து மணல் போட்டு வருத்துச் சாறு விட்டிறக்கி சீலை வண்டு கட்டிச் சாறு இறக்கி அதின் பின் கருக்கு வகை கேளு. கலங் கொம்பு ஊரு சுத்திச் சோறு, பெண்டுகள் படுக்கும் பாய்க் கோரை, மயிர் பின்னிக்கும் ஆமை யோடு வாழைப்பழத் தோலு கருங் கம்பிளி, கொளிக்காரம், பொரிகடலைத் தோலு, கருஞ் நவதானியம் தேங்காயின் குரும்பி கருவேம்பின் கோல் இவ்வி யெல்லாம் சட்டியில் கருக்காக்கு மருந்து கேள். சீரகம், ஏலம், பெருங்காயம், வசம்பு, ஓமம், பேய்ப்புடல், சமுத்திராப் பழம், கடுக்காய், கிராம்பு, திரிகடுகு, சாதிக்காய். சாதிபத்திரி, தேத்தான் விரை, சீனிக்காரம், நெய்க் கோட்டான் பழம், வெள்ளை வெங்காயம், களிப்பாக்கு, கடுகு வேசியர்கள் பசும் மஞ்சள், காட்டுச் சீரகம், மெள்ளவே பொன்னிறமாய் வறுத்து வெங்காரம் பொரிகாரம் கல்லாவி விழுது உள்ளபடி சரக்கெல்லாம் வகைக்கு ஒரு விராகனிடை வாங்கி வந்து கல்வத்திலிட்டு முன் சொன்ன சாறுகள் விட்டு நாலு சாமமரைத்து ஆன பின் குளிகை குன்று மணிப் பிரமாணம் உருட்டி நிழலில் குழுகக் காய்ச்ச சகல பிணிக்கும் சீவி யென்று பண்டு முனி சொன்னுரிம் மருந்து. இதற்கு அனுபான முலைப்பால் வெந்நீரில் கொடுக்க கொண்டிடுந் தாகங் கனை யெட்டுக் கள்ளப் பிணிகளெட்டு மாந்த மெட்டு பசுங் குளி முட்டு பெண்டுகள் வெளிமுட்டு வலை நோய் ஏன் ல் பிறவிச்சு முட்டடைப்பான் சகல பிணி போமே.

வங்க பற்பம் :-

கருவங்கத்தைக் கொண்டு வந்து தகடு தட்டி பொடியாகத் திரிச்சு அதைக் கல்வத்தில் போட்டு வாரண முட்டையைக் கொண்டு வந்து உடைத்து அதில் வெள்ளைக் கருவெடுத்துக் கொண்டு (மஞ்சள் கரு ஆகாது) அந்தக் கல்வத்தில் முட்டை ஒடு போட்டு முதல் அரைச்சு அதுக்குப் பிற்பாடு வெள்ளைக் கருவை மத்தி . க. சாமமரைத்து அதை நத்தாங் கொடுக்கையில் போட்டு அடைத்து 3 சீலை மண் செய்து வெய்யிலில் காய வைத்துக் குளிப் புடம் போடவும். கெசபுடம் போடவும் பற்பமாம்.

தம்பெண்ணை கடைச் சரக்கு :-

கோஷ்டம், அதிமதுரம், செம்பிரம்பட்டை, வெள்ளேலம் இதை யெல்லாம் இடித்து வஸ்திர காயம் பண்ணிக் கொள்ளுகிறது. அதின் பிற்பாடு மணத்தக்காளி தழை கொண்டு வந்து இடித்துச் சாறு பிழிந்து வைத்துக் கொள்ளவும். அதின் பிற்பாடு சீமை அத்திப் பழம் கொண்டு வந்து சாறு பிழிந்து வைத்துக் கொள்ளவும். அதன் பிற்பாடு இரு வெங்காயம் அணுக்கு அணுக்காய் அரிந்து வைத்துக் கொள்ளவும். அதின் பிற்பாடு ஈர வெங்காயம் அணுக்கு அணுக்காய் அரிந்து வைத்துக் கொள்ளவும். அதின் பிற்பாடு விளக்கெண்ணை கொண்டு வந்து சட்டியிலாத்திச் சற்றே அடுப்பில் வைத்து தனிழச் சாறு விட்டு பழச் சாறு விட்டு முன் ள் போட்டு

துளாவித் துளாவிக் கொண்டிருந்து சற்றே சுட்ட பிற்பாடு வெங்காயப் பொடியைப் போட்டுத் துளாவி மெழுகு பதத்திலிறக்கி வைத்துக் கொண்டு சாப்பிட்டால் மேகசூடு தணியும். வெள்ளை நிற்கும். இது கை கண்டது.

கல்ரோவுக்கு:- 24.10.63.

செந்நாயுருவி இலை, வெங்காயம், புளி இதை யெல்லாம் நய்ய நருக்கி அதில் முலைப்பால் விட்டு பிசைந்து துணியில் வைத்துப் பிழிந்து கல்லில் உலக்கைப் பூணில் உரைத்துக் கண்ணில் பத்துப் போடவும். அதைக் கேட்கும். கை கண்டது.

தாளிச பத்திரி சூரணம்:-

தாளிச பத்திரி விராகனிடை. , சுக்கு விராகனிடை.10, மிளகு விராகனிடை.3 திப்பிலி விராகனிடை.8, வெள்ளை ஏலம் விராகனிடை.7, சன்ன லவங்கப் பட்டை விராகனிடை.6, கூகைநீர் விராகனிடை.16, கல்கண்டு வராகனிடை.32 இதை யெல்லாம் இள வறுப்பாய் வருத்து இடித்து வஸ்திர காயம் பண்ணி வைத்துக் கொள்ளவும். இதைப் பாகமறிந்து கொள்ளவும். முன்படைக் கரப்பானுக்கு எண்ணெ:-

சமுத்திராப் பழம், வலம்புரிக்காய், சாம்பிராணி, கஸ்தூரி மஞ்சள், கடல் நுரை இதை யெல்லாம் கல்வத்தில் போட்டு நறுக்கி வைத்துக் கொண்டு அதின் பிறகு முசுரு முட்டையைப் போட்டு பிறகு கடைச் சரக்குத் தூளைப் போட்டு அடுப்பில் வைத்து பொங்கின பிற்பாடு இறக்கி இறுத்துக் கொள்ளவும். இதுக்கு காதிலே சீழ் வடிகிறதுக்கு குதிகல் நிற்கும். கை கண்டது.

பூநாகம் விராகனிடை.½, கெந்தகம் விராகனிடை.½, மஞ்சள் மிளகு எண்ணை, வெங்காயம் இதைச் சமன் கூட்டி எரித்துக் காதில் குத்தவும்.

பூற எண்ணை: ஏலை மூலிக்கை:-

சங்கன் குப்பியிலைச் சாறு, பாவட்டை யிலைச் சாறு, கருநொச்சி யிலைச் சாறு, சிரந்தி நாயகம், யிலைச் சாறு, காட்டுக் கோவை யிலைச் சாறு, காட்டு மல்லிகை யிலைச் சாறு இதை யெல்லாம் இடித்துப் பிழிந்து வைத்துக் கொண்டு பறங்கிப் பட்டை விராகனிடை.½, வால் மிளகு விராகனிடை.½, தாளிச பத்திரி விராகனிடை.½, சன்ன லவங்கப் பட்டை விராகனிடை.½, லவங்கம் நஞ்சி விடை விராகன்.½, கோஷ்டம்.½, சுருஞ்சரகம்.½, தானிக்காய்.½, சிறுநாகப்பூவு.½, கார்போகரிசி.½, பிரப்பங் கிழங்கு.½, சாதிபத்திரி.2½, குரசாணி ஓமம்.½, மெருகன் கிழங்கு.½, கெருடன் கிழங்கு.½. சிவனார் வேம்பு.½ இதை யெல்லாம் இடித்து தூள் செய்து அந்த எண்ணையில் போட்டுத் துளாவி பொங்கி வரும் போது அந்த ஈர வெங்காயம் அரிஞ்சி போட்டு துளாவி இடக்கும் போது பதம் வரும் போது அந்தக் கொத்தமல்லியை அந்த எண்ணையில் போட்டு வாசம் வரும் அப்போது அந்த எண்ணையை யெடுத்து வைத்துக் கொள்ளவும். இதுக்குப் பத்தியம் உப்,புளி ஆகாது.

முக சன்னிக்கு திரிச்சல்:-

சுக்கு, மிளகு, திப்பிலி, சதகுப்பை, மரமஞ்சள், கற்பூரம், ரசம், மலேசிலை மஞ்சள் இதை யெல்லாம் ஒரு விராகனிடைக்கு நறுத்துக் கொண்டு துண்டு மணியிலைச் சாறு விட்டு அரைத்து திரிச்சல் பண்ணி முகந்தால் சன்னி தோஷமும் முறியும்.

விஷ சுரத்து மேல் தோஷத்துக்கு:-

சுக்கு, மிளகு, கொத்தமல்லி, கடுக்காய், தானிக்காய், சங்கம் வேர், கண்டங்கத்திரி வேர் இதையெல்லாம் இடித்து இள வருப்பாய் வறுத்து ஒரு செம்பு தண்ணீர் விட்டுக் காய்ச்சிக் கொடுத்தால் நிற்கும் தாகம்.

நாவு வறண்டதுக்கு மருந்து:- கலைமான் கொம்பு, நற்பவளம், உத்திராட்சம், வெள்ளி

பொன்.. மயிலிறகு, நெருப்பில் சுட்டு முலைப்பாலில் இதை யெல்லாம் உரைத்து மத்திச்சு நாக்கில் தடவவும். தொப்புளில் சீலைத் துணியில் படிச்சுப் போடவும். தாகம் நிற்கும்.

__கலப் பிரமாந்திரி:-__

ஈயச் செந்தூரம் பலம்.க, மிருதார் சிங்கி பலம்.½, காசுக்கு சபேதா பலம்.½, நல்லெண்ணை படி 1/16 இதை யெல்லாம் கல்வத்திலிட்டு நறுக்கி வைத்துக் கொண்டுஒரு அகல் சட்டி அடுப்பில் வைத்து நல்லெண்ணை முன்னே விட்டு ஈயச் செந்தூரத்தைப் போட்டுத் துளாவி வரும் போது சபேதாவைப் போட்டுத் துளாவி அதற்கு பிற்பாடு மிருதார் சிங்கைப் போட்டுத் துளாவி வரும் போது அதிலிடும் பதமெப்படி யென்றால் பொட்டுப்புக் காய்ச்சிக் கீழே விட்டால் மெழுகு பதத்திலிறக்கவும். அதின் பிற்பாடு சட்டியில் தண்ணீர் வைத்து அதில் கொட்டான் கச்சியை வைத்து தண்ணீரில் ஊத்தவும்.

__காதில் சீழ் விழுகிறதுக்கு:-__

முத்தின புளியம் பிரண்டை, முத்தின புங்கம் பட்டை, வசம்பு ஒரு துலைப் பண்டு, இதை யெல்லாம் நருக்கி நல்லெண்ணையில் போட்டு கொதிப்பித்து வைத்துக் கொண்டு காதில் புளியச் சீய் மாறும்.

__விரயுவுக்கு லேகியம்:-__

தானிக்காய், கற்கடகசிங்கி, மரமஞ்சள், கோஷ்டம், யேலம், திரிகடுகு, இந்துப்பு, சிறுதேக்கு, கண்டங்கத்திரி, வகைக்கு சமன் கூட்டி யிஞ்சிச் சாரம் தேனும் சமனுக்கு கூட்டி லேகியும் பிணைச்சு வைத்துக் கொண்டு அதில் காந்த செந்தூரம் இணைக்கவும்.

__பசு முடிக்கி:-__

கீழா நெல்லியிலை, அம்மான் பச்சரிசியிலை, வேலம் கொழுந்து, ஆவாரங் கொழுந்து, விடத் தோரங் கொழுந்து, நல்ல சீரகம், சாதிக்காய், கசகசா, ஏலரிசி, சதகுப்பை, லவங்கப் பட்டை (முடிவு இல்லை)

__கிராணிக்குச் சூரணம்:-__

பழைய மாங்கொட்டையைத் தட்டி உள் பருப்பு எடுத்து நறுக்கி அதில் அயச் செந்தூரம் போட்டுக் கொடுத்தால் நிற்கும். இல்லா விட்டால் சும்மா கொடுத்தாலும் நிற்கும். கை கண்டது.

கடைச் சரக்கு ஓமம், வெந்தயம், சுண்ட வத்தல்; ஏலம், தானிக்காய், நெய் மேற்கண்ட மருந்தோடே கூட்டவும்.

__வாலை ரச பற்பம்:-__

ரசம் எடுத்து குழிக் குல்லிப் போட்டு கண்டங் கத்தி யிலை பழச் சாறு படி.1/8 அல்லது இலை சமூலம் இடித்து பிழிந்த சாறு ஊத்தி அரைப்பு.4 சாமம் அரைத்து வில்லை தட்டி வெய்யில் காயப் போட்டு புடம் ஒரு முட்டை 40 வைத்துக் கொடுத்தவும். பற்பமாகும். அதை எடுத்து புட்டியில் வைத்துக் கொண்டு வெண்ணெயிலாவது நெய்யிலாவது சாப்பிடவும். இதுக்கு மேக வாய்வெல்லாந் தீரும்.

__காமாலைக்கு:-__

உரிசிலாங் கன்னி கொட்டைக் கொழுந்து நீர் முள்ளி தண்டு பிராய் இலை சிமன் கூட்டி அரைத்து குளிகை செய்து உலத்தி காலை மாலை ஆறு நாள் கொடுக்கவும். பத்தியம் புளி ஆகாது.

__கக்குவானுக்குப் பதங்கம்:-__

சுக்கு காசிடை.க, மிளகு.க, திப்பிலி.க, சித்தரத்தை.க, அதிமதுரம்.க, பனைவெல்லம் காசிடை.உ, கடுக்காய்.உ, தானிக்காய் இந்தக் கடைச் சரக்கெல்லாம்

இள வறப்பாய் வருத்துக் கொண்டு அதின் பிறகு பச்சைக் கடுக்காய்.உ, போட்டு அந்தச் சரக்கோடே இடித்து வஸ்திர காயம் பண்ணிக் கொண்டு நல்ல சட்டி அடுப்பில் வைத்து முடக் கொத்தான் கொழுந்து இலை கொண்டு வந்து அந்தச் சட்டியில் போட்டுப் பசு நெய்யை வார்த்து அதை கைகக்கு வதக்கி மெழுகு பதத்தில் அந்த தூளைக் கொட்டி அதின் பிறகு பனைவெல்லம் போட்டுக் கிளறி யெடுத்து கல்வத்தில் போட்டுஅரைத்து குகை பண்ணி வைத்துக் கொள்ளவும். அதை இருமலுக்கு கொடுக்கலாம். கை கண்டது.

****

ச.ச:24.10.63.

முற்றும்

****